# யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (1930 - 1958) ஈழகேசரிப் பத்திரிகையினை அடிப்படையாகக் கொண்டது

கா. அருந்தவராஜா

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் வடபகுதியில் அமைந்து பாரம்பரிய பொருளாதார பண்பாட்டு நிறுவனங்களுடன் அடையாளங் காணப்படுகின்ற பிரதேசமாக யாழ்ப்பாணப் பிரதேசம் காணப்படுகின்றது . யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் அயலில் காணப்படுகின்ற தீவுகளையும் உள்ளடக்கிய இத்தகைய பிரதேசத்தினுடைய வளர்ச்சியில் அல்லது அபிவிருத்தியில் புராதன காலந் தொடக்கம் அதனது பொருளாதார நடவடிக்கைகள் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண அரசர்களுடைய காலத்திலும் சரி பின்வந்த ஐரோப்பியர்களது ஆட்சிக்காலங்களிலும் சரி அவர்களினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதாரத்தின் அடிப்படையினைத் தென்னிலங்கையிலோ அல்லது மலைநாட்டிலோ மேற்கொண்டதனைப் போன்று மாற்ற முடியவில்லை. மாறாக அவற்றுடன் இணைந்த வகையிலேதான் அவர்கள் தமது பொருளாதார நகர்வினையும் சுரண்டலையும் மேற்கொண்டு வந்தனரென்பதே உண்மை. இதற்கு இறுதியாக 1948 வரை இலங்கை முழுவதிலும் ஆதிக்கத்தினைச் செலுத்திய ஆங்கிலேயரும் கூட விதிவிலக்க அமையவில்லை. இத்தகைய ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியளவில் தமிழ் மக்களைச் சகல துறைகளிலும் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தினைப் பிரதானமாக முன்னிறுத்தி,யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு வெளிவர ஆரம்பித்த ஈழகேசரி என்றதமிழ் வார வெளியீட்டின் ஊடாக அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பு அல்லது பொருளாதார நிலை பற்றியும், அக்கால யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரத்தினை முன்னேற்றச்செய்யும் பொருட்டு இப்பத்திரிகை தெரிவிக்கின்ற கருத்துக்கள் பற்றியும் அறிய முடிகின்றது. இவ்வகையில் இப்பத்திரிகையானது கொண்டிருந்த நோக்கங்களில் யாழ்ப்பாணத்தினது பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றென்பது அவதானிக்கத்தக்கது. இது அவ்வப்போது தனது வெளியீடுகளின் மூலமாகத் தேசத்தின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை அரசிற்கும் மக்களுக்கும் தெரிவித்தும் வந்தது. எனவே ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்தகால (1930-1968) யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதார நிலையினை அறிய விரும்புகின்ற எவருக்கும் இது சிறந்த வரலாற்று ஆவணம் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

**திறவுச்சொற்கள் :** மலையாளப் புகையிலை வியாபாரம், சுதேசியம், கடலேரித்திட்டம், சுதேசியம், கூட்டுறவு

## 1. அறிமுகம்

ஒரு ஜனநாயக அரசினது முக்கியமான மூன்று கூறுகளாகச் சட்டத்துறை, நீதித்துறை நிர்வாகத்துறை என்பன காணப்படுகின்றன. இந்நிலையில் மக்களது உரிமைகளைக் காத்து அரசியலை நெறிப்படுத்துகின்ற துறைகளிலொன்றாகப் பத்திரிகைகள் காணப் படுவதனால் பத்திரிகைகள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கொள்ளப்படுகின்றன. (ஆனந்தராஜ்.ந.2002, ப.01) அவ்வகையில் ஈழகேசரி தோன்றிய காலமானது ஈழத்தின் அரசியல், சமூகம், வரலாறு பொறுத்து மிகவும் முக்கியம் பெற்றதும் இத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. அரசியல் ரீதியில் டொனமூர் அரசியல் திட்டமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும்காணப்பட, சமூக ரீதியில்பழைய சம்பிரதாயங்கள், மரபுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றினைத் தகர்த்தெறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறே பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த யாழ்ப்பாணத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே இத்தகையதொரு பின்னணியில் ஈழகேசரியினது வரவானது

யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்றது. பொதுப்பட இப்பத்திரிகை தோன்றிய காலப்பகுதியிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியிலோ தோன்றிய பத்திரிகைகள் எல்லாமே மதப் பிரசாரத்தினையோ அல்லது தொழிலாளர்களது நலன்களையோ இலக்காகக் கொண்டு தான் தோன்றியிருந்தன. ஆனால் இப்பத்திரிகையோ இத்தகைய நோக்கங்களிலிருந்து முழுவதுமாக விலகி மதச் சார்பற்று, சமுதாய நலன்களைக் கருத்தில் கொண்டு பணியாற்றியது. தமிழ் பேசும் மக்களை அதிகமாக கொண்ட யாழ்ப்பாணப் பிரதேசத்து மண்ணில் தோன்றி அவர்களுக்காகவே தனது இறுதிக்காலம் வரை உழைத்தது. இப்பத்திரிகையின் மூலமாக யாழ்ப்பாணத்தில் அச்சமயத்தில் இடம் பெற்ற பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும், அவை தமிழ் மக்களது வாழ்வியலில் வகித்திருந்த பங்கு பற்றியும், சமகாலத்தில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும், அத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழிகள் பற்றியும் செய்திகளைப் பிரசுரித்து வந்தது. அவ்வகையில் அக்கால யாழ்ப்பாண தேசத்தின் பொருளாதாரத்தினது வழிகாட்டியாகப் பேசப்படுகின்ற இப்பத்திரிகையானது யாழ்ப்பாணப் பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாகவும் விளங்கியதெனலாம்.

**ஈழகேசரியின் தோற்றம்**

1930 ஆம் ஆண்டு காலப்பகுதியினை அடுத்த சுமார் 25 வருட காலப்பகுதியினை அறிஞர்கள் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பத்திரிகைக் காலம் என்பர். (சுப்பிரமணியம். 1978, ப.169) இத்தகையதொரு பத்திரிகைக் காலத்தினைத் தனக்குள் உள்ளடக்கிய வகையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. தென்னிந்தியாவில் பத்திரிகைக் காலங்களை மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம் எனக் குறிப்பிடுவதனைப் போன்று ஈழத்திலும் தனக்கென ஒரு காலப்பகுதியினை ஏற்படுத்தி அது சிறிய காலமெனினும் அக்காலகட்டதிலே புதுமைகள், புரட்சிகள் செய்து நினைவில் நிற்பது ஈழகேசரியே. அவ்வகையில் 1930 யூன் 30 இல் தனது வார வெளியீட்டினை முதன் முதலாக ஆரம்பித்த இப்பத்திரிகையானது தொடர்ந்து 1958 வரை 28 வருடங்கள் சிறப்பாகத் தனது பணிகளைச் செய்து வந்தது. இப்பத்திரிகையானது நா.பொன்னையா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய சொந்த அச்சகமான திருமகள் அழுத்தகத்திலிருந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வாராந்தப் பத்திரிகையாக இருந்தாலும் கூட அக்காலத் தமிழ் மக்களது சகல துறை வளர்ச்சியிலும் பெரும்பங்கினை ஆற்றியிருந்ததெனலாம்.

யாழ்ப்பாணத்தில் தோற்றம்பெற்ற முதலாவது பிரதேசப் பத்திரிகையாகக் கருதப்படுகின்ற இப்பத்திரிகை அரசியல் சூழலை ஏனைய சூழலிலிருந்து பிரித்துப் பாராமல் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப்பண் பாட்டுச் சூழலுடன் ஒருங்கிணைத்துப் பார்த்ததென்றே கூறுதல் வேண்டும். எந்த ஒரு அரசியல் கட்சியினது பின்னணி கூட இதற்குக் கிடையாது. (உதயன், 2002 மார்ச்சு 18, ப.03) தொடக்கத்தில் இது ஒரு வாராந்தப் பத்திரிகையாகப் புதன் கிழமைகளில்தான் வெளிவந்தது. பின்னர் இது 1933 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரத் தொடங்கியது. தொடர்பு சாதன வசதிகள் குறைந்த அக்காலத்தில் ஈழகேசரியின் சேவை அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. ஈழகேசரி புதினங்களை வெளிப்படுத்துகையில், மிகவும் சிறப்பான முறையில் அதனை விளங்க வைக்கின்ற தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. புதினங்களில் உள்ளூர் புதினங்களுக்குத்தான் அதிகளவு முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தது.

ஈழகேசரி பத்திரிகையானது தனியே யாழ்ப்பாணத்தில் மட்டுமே வாசகர்

வட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. அது தென்னிலங்கையிலும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலும் தனது வாசகர்களைக் கொண்டிருந்ததுடன் கடல்கடந்து ,இந்தியா, பர்மா, மலாயா போன்ற நாடுகளிலும் கூட யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் செய்திகளை தெரிவிக்கின்ற ஊடகமாகக் காணப்பட்டது. தமிழர் வாழுகின்ற பகுதிகளிலுள்ள செய்திகளைக் கொழும்பு நிருபர் கடிதம், கிழக்குத் தபால், மலையகச் செய்திகள் போன்ற பல தலைப்புக்களின் கீழ் வெளியிட்டு வந்தது.

**ஈழகேசரியும் யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பும்**

யாழ்ப்பாணப் பொருளாதார அமைப்பில் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப் பகுதியில் விவசாயமே பிரதான இடத்தினை பெற்றிருந்தது. அவற்றில் நெல், மிளகாய், வெங்காயம், புகையிலை, காய்கறிவகைகள், சிறுதானியங்கள், பப்பாசி போன்றன பிரதான இடத்தினைப் பிடித்திருந்தன. மேலும் இப்பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் கைத்தொழில் துறையானது பெருமளவிற்கு விருத்தியடையவில்லையென்றே கூறுதல் வேண்டும். குடிசைக் கைத்தொழில்கள் தேசத்தின் பல பகுதிகளிலும் பரலாகக் காணப்பட்டன. கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களில் அனேகர் மீனவத் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். இவற்றினைவிட சுருட்டுக் கைத்தொழில், மலையாளப் புகையிலையின் மூலமாகக் கிடைத்த வருமானம், மலாயாவிலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாய், அரச உத்தியோகம், வியாபார நடவடிக்கைகள், கூலி வேலை போன்றன அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணம் பெற்ற வருவாய் தருகின்ற பிரதான மூலங்களாகக் காணப்பட்டன. எது எவ்வாறாயினும் ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் (1930 - 58) யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதார நிலையானது உறுதியற்றதாகவே காணப்பட்டது. இத்தகைய உறுதியற்ற நிலையில் திகழ்ந்த யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புகின்ற பணியில் ஈழகேசரி தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டது. அது தந்த செய்திகள் தமிழ் பேசும் மக்களது உணர்வினைத் தூண்டுகின்ற வகையில் அமைந்திருந்தன. அதில் ஓரளவிற்கு வெற்றியினையும் பெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேசமானது பல்வேறு வழிகளிலும் முன்னேற்றமடைவதற்கு யாழ்ப்பாண மக்கள் படிப்படியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி 1931 மார்ச்சு 18 இல் வெளிவந்த ஈழகேசரியின் வெளியீடொன்றில் க.வை.நமசிவாயம் என்பவர் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு சில தகவல்களை அவர் குறிப்பிட்டிருந்தார்.

"நாம் எல்லோரும் சுயநலமே முதன்மையாகக்கொண்டு நாம் நல்லாயிருக்கச் சுகமாக வழிவகைகளிறங்குவோமேயானால் நமது தேசம் ஒருக்காலும் முன்னிலையில் வரமாட்டாது. எங்களால் எங்களது தேசத்திற்கு ஆகவேண்டிய கடமைகளை நாங்கள் செவ்வனே யுணர்ந்து செய்வோமானால் எங்களது தேசம் முன்னேற்றுவதற்கு ஒரு வித ஆட்சேபமுமில்லை. " (ஈழகேசரி, 1931 மார்ச்சு 18, ப.04)

அவ்வகையில் ஈழகேசரிப் பத்திரிகையானது நாட்டினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகளை செய்திகளாகவும் பிறர் எழுதிய படைப்புக்களின் வாயிலாகவும் ஆசிரியத் தலையங்கங்களின் ஊடாகவும் மக்களுக்குத் தெரிவித்து வந்தது. இது போன்று சமகாலத்தில் யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு வெளிவந்த வேறெந்தப் பத்திரிகைகளும் யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான முயற்சியில் அக்கறை கொண்டதாகத்

தெரியவில்லை. அவை தாம் ஆரம்பித்த நோக்கங்களை நிறைவு செய்வதிலேதான் அதிகளவில் கவனத்தினைச் செலுத்தின.

**விவசாயம்**

அக்கால யாழ்ப்பாண மக்களது விவசாய நடவடிக்கைகளில் நெல், மிளகாய், வெங்காயம், புகையிலை, காய்கறிவகைகள் மற்றும் சிறுதானியங்கள் என்பன பிரதான இடத்தினை வகித்திருந்தன. பெரும்போகம், சிறுபோகம், இடைப்போகம் என்ற அடிப்படையில் பெருமளவிற்கு மழை நீரை நம்பியதாக இவர்களது விவசாய நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அவ்வகையில் விவசாயம் பற்றியும், விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக விவசாயிகள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றியும் இப்பத்திரிகையில் செய்திகள் பல காணப்படுகின்றன. இத்தகைய செய்திகள் ஆசிரியர் தலையங்கமாகவும் கட்டுரை வடிவங்களிலும் மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளிவந்தன. விவசாயிகளை இப்பத்திரிகையானது கமக்காரர் என்றே அழைப்பதனை அதனது வெளியீடுகள் பலவற்றில் காணலாம்.

யாழ்ப்பாண விவசாயிகளில் அனேகர் ஈழகேசரி வெளிவந்த காலத்தில் எதிர்நோக்கிய முக்கியமான பிரச்சினை நீர் பற்றாக்குறையே, இப்பிரச்சினை அதிகமாகத் தீவுப்பகுதிகளிலே தான் காணப்பட்டது. அக்காலப்பகுதியில் குளங்கள், கால்வாய்கள் போன்றன புனரமைக்கப்படாமல் இருந்தன. எனவே இவற்றினைத் திருத்தி, விவசாயிகளுக்கு வழங்கி, யாழ்ப்பாண மக்களது நீர்ப்பிரச்சினைகளைத் தீர்த்து உதவுமாறு அரசாங்கத்தினைக் கேட்டுப் பல கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. இவ்விடயமாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொரு சம்பவம் யாதெனில் நிலாவரைக் கிணற்றிலிருந்து நீரினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நீண்ட காலமாக யாழ்ப்பாண மக்களால் எடுக்கப்பட்டுவந்த முயற்சியானது 1941 இல் தான் நிறைவேற்றப்பட்டதென்பதே.

மேற்குறித்த விடயமாக பின்வரும் தகவலொன்றினை ஈழகேசரியிலிருந்து பெறமுடிகின்றது.

"யாழ்ப்பாண விவசாய முயற்சியின் சரித்திரத்திலேயே வியாழக்கிழமையானது ஒரு முக்கியமான நாளாகும். நிலாவரைக் கிணற்றிலிருந்து நீர் இறைக்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்யப்படாமலிருந்த ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைத்தது" (ஈழகேசரி, 1946 யூன் 16, ப.4B)

மேலும் நிலாவரைக் கிணற்றிலிருந்து மட்டுமன்றி ஊரெழுவிலுள்ள பொக்கனை, மானிப்பாயிலுள்ள இடிகுண்டு என்பனவற்றிலிருந்தும் நீரினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதனை இப்பத்திரிகையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதேநேரத்தில் இத்தகையதொரு முக்கியமான தகவலை யாழ்ப்பாணத்திலிருந்து சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த எந்ததொரு பத்திரிகையிலும் காண முடியவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதேநிலைதான் தென்னிலங்கையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தமிழ் பத்திரிகைகளிலும் காணப்பட்டது. காரணம் அவையெல்லாம் ஒன்றில் மதப் பிரசாரத்தினையோ அல்லது குறிக்கப்பட்ட மக்களது நலன்களையோதான் கவனத்தில் கொண்டிருந்தன.

**பரவைக்கடல் திட்டம்**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட மற்றொரு திட்டம் பரவைக்கடல் திட்டமாகும். அக்காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்களிலொருவராக

விளங்கிய க.பாலசிங்கம் அவர்களும் அவருடன் சேர்ந்திருந்த சில தலைவர்களும் இவ் விடயமாகப் பெருமளவிற்கு அக்கறை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலுமுள்ள உப்பு நீரினைச் சுத்த நீராக்குவதே இத்திட்டத்தினது பிரதான நோக்கமாகும். வலிகாமம் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த மக்களில் சிலர் மேற்கூறப்பட்ட விடயமாக அக்காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு மனு வினையும் செய்திருந்தனர். அவ்வகையில் இத்திட்டம் பற்றிய தகவலொன்றினைத் தனது வெளியீடொன்றில் பின்வருமாறு ஈழகேசரிப் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

"நீண்டகாலமாக ஆலோசனை செய்து வந்த யாழ்ப்பாணப் பரவைக்கடல் திட்டம் சம்மந்தமான வேலை நீர்ப்பாசனப் பகுதியினரால் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும். வடமராட்சிப் பரவைக் கடலிலுள்ள உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீர் வாவியாக மாற்றத் தொண்டமானாற்றில் அணைகட்ட பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. "ஈழகேசரி, 1947 யூலை 06, ப 4A)

1953 இல் அரசாங்கமானது யாழ்ப்பாணக் கடலேரித் திட்ட வேலைகளைத் துரிதப்படுத்தியது. சமகாலப் பகுதியில் இதனது மற்றொரு பகுதி வேலையும் தொடங்கப்பட்டது. ஆனையிறவுப் பரவைக் கடலைச் சுத்தமாக்கி நீர் ஏரியாக்குகின்ற வேலையும் அங்கிருந்து தொண்டமானாறுவரை அமைக்கப்பட்டுள்ள பெரிய வாய்க்காலுக்கான வேலையும் மும்மரமாக அக்காலப்பகுதியில் நடைபெற்று வந்தன. இவற்றின் மூலமாக யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய விவசாயப் பிரதேசமொன்றினை உருவாக்குவது அக்கால ஆட்சிபீடத்திலிருந்த அரசினது நோக்கமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண விவசாயிகளில் பலர் வறியவர்களாகக் காணப்பட்டதனால் அவர்களில் சிலர் தனிப்பட்டவர்களிடம் அதிக வட்டிக்கு பணத்தினைப் பெற்று விவசாயத்திலீடுபடு வதனைத் தடுக்கின்ற நோக்கத்துடன் அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற நோக்கத்துடன் "வட இலங்கை ஐக்கிய சங்கங்கள்" என்ற பெயரில் சங்கங்கள் சில ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண விவசாயிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி பூநகரி, கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பகுதிகளிலும் பெருமளவு காணிகளை உடைமையாகக் கொண்டிருந்தனர். இந்நிலையில் 1942 இல் அரசாங்கத்தினால் யாழ்ப்பாண மக்களுக்குச் சில குறிப்பிட காரணங்களை முன்வைத்து அக்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து நெல், வைக்கோல் போன்றனவற்றினைக்கொண்டு வருவதற்குத் தடைவிதித்திருந்தது.

எனவே இத்தகைய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்கு எதிராகத் தனது கருத்தினை ஈழகேசரியானது பின்வருமாறு முன்வைத்திருந்தது.

"கிளிநொச்சி, பரந்தன் முதலிய இடங்களில் காடுகளை வெட்டி வயல்களாக்குவதற்கு கமக்காரர் செலவிட்ட பணம், அடைந்த சிரமம். அப்படியிருக்க இவர்களை ஊக்கப்படுத்தாமல் அரசு தடைகளை ஏற்படுத்துவது முறையல்ல". (ஈழகேசரி, 1942 ஒக்டோபர் 04, ப.04)

அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற உணவுப் பற்றாக் குறையானது அங்கு சாதாரணமாக இடம் பெறுகின்ற நிகழ்வாகவே காணப்பட்டது. இதனால் இப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் அரசாங்கம் அதிகளவு செலவினைச் செய்து இந்தியா உள்ளிட்ட பிற தேசங்களிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்துவந்தது. அதுமட்டுமன்றி அவற்றினைக் கொள்வனவு செய்த விலைகளிலும் பார்க்க குறைந்த

விலைக்கே மக்களுக்கு விநியோகமும் செய்தது. இந்நிலையினை எப்படியாவது மாற்ற வேண்டுமென விரும்பிய ஈழகேசரிப் பத்திரிகை இவ்விடயமாக அரசாங்கம் மட்டுமே அக்கறையினைச் செலுத்தாமல் யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளும் தமது பங்கிற்குச் செய்ய கூடியவற்றினைச் செய்து உள்நாட்டில் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டுமெனக் கூறுகின்றது. அரிசி உணவினைத் தவிர்த்து மாற்று உணவுகளை உண்ணுதல் வேண்டும், அரச உத்தியோகஸ்தர்களும்தமது ஓய்வு நேரங்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தலாம் போன்ற ஆலோசனைகளையும் மக்களுக்கு முன்வைக்கின்றது (ஈழகேசரி, 1952 ஆகஸ்ட் 10 ப.14) இவை எல்லாம் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வடஇலங்கை மக்கள் உள்நாட்டு யுத்தத்தின்போது அனுபவிக்க வேண்டி வரலாம் என்ற ஈழகேசரியினது தீர்க்கதரிசனமாகவும் இருந்ததிருக்கலாம். தனது மற்றொரு வெளியீட்டொன்றில் பொருளாதார மந்தநிலையினை அகற்றுவதற்கு மது விலக்கினை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கின்றது. (ஈழகேசரி, 1952 டிசெம்பர் 21. ப.04)

யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கத்தினைத் தனது நோக்கங்களிலொன்றாகக் கொண்டிருந்த இப்பத்திரிகையானது யாழ்ப்பாணத்தில் பல்வேறு காரணங்களினால்அறுவடைகுறைகின்றசமயங்களிலெல்லாம் மக்களுக்கு நிவாரணத்தினை வழங்குமாறு கோரிக்கையினை அவ்வப்போது அரசாங்கத்திடம் முன் வைத்து வந்தது. எடுத்துக்காட்டாக 1950 அளவில் யாழ்ப்பாணத்தில் காலநிலை பாதிப்படைந்தமையினால் அறுவடை குறைந்த போது அரசாங்கத்திடம்கமக்காரர்களுக்கு நிவாரணத்தினை வழங்குமாறு இப்பத்திரிகையானது கோரிக்கையினை விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் விவசாயக் காணிகளை உடைமையாகக் கொண்டவர்களுக்காகக் கரைச்சித் திட்டத்தின் காணிப்பகுதி அதிகாரியினது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் சில எடுக்கப்பட்டதனை தனது 1941 ஜனவரி 26 வெளியீட்டில் ஈழகேசரி பின்வருமாறு தெரிவித்திருந்தது.

- மந்தைகளின் அபிவிருத்தியினைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.
- சிறுபோகச் செய்கையினை இல்லாது செய்தல் வேண்டும்.
- தற்போது விருத்தி செய்யப்பட்ட ஒன்பதினாயிரம் ஏக்கர் வயலினைவிட இன்னும் அதிகமான நிலங்கள் மக்களுக்கு உதவ வழி தேட வேண்டும்.

ஆனால் இத்தகைய தீர்மானங்களை வன்மையாகக் கண்டனம் செய்கின்ற ஈழகேசரியானது இத்தகைய முடிவுகள் மேலும் வட மாகாணத்தினது பொருளாதாரத்தினை பாழாக்கிணறுக்குள் தள்ளுவதற்கு ஒப்பானதெனத் தெரிவிக்கின்றது (ஈழகேசரி, 1941 ஜனவரி 26, ப.01)

நெல்லினைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலே மிளகாய் உற்பத்தியானது விவசாயத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பச்சைமிளகாய் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இத்தகைய உற்பத்தியில் தீவுப்பகுதிகள்தான் முன்னிலையில் காணப்பட்டன. அதேநேரத்தில் காய்ந்த மிளகாயானது நாட்டின்பிறபகுதிகளிலிருந்தும் இறக்குமதியானது. அக்காலப்பகுதியில்

வெங்காயமும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் செய்கை பண்ணப்பட்டது. அடுத்துப் புகையிலைச் செய்கையும் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் பிரதான இடத்தினை வகித்திருந்தது. இது போர்த்துக்கேயரது வருகையுடனேயே நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. (Seneveratne, 1996p. 223) பின்னர் ஒல்லாந்தரது காலத்தில் இது யாழ்ப்பாணத்தினது வருவாயில் பிரதான இடத்தினை வகிக்க ஆரம்பித்தது. பொதுவாக ஈழகேசரியில் விவசாயப் பயிர்கள் தொடர்பான செய்திகள் பரவலாக அடிக்கடி வெளிந்திருந்தாலும் கூட அவற்றில் புகையிலைச் செய்கை பற்றிய செய்திகளே அதிகளவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பனைவளம்**

உள்நாட்டு வளங்களில் பனை வளத்தினைப் பாதுகாப்பதற்கான அவசியத்தினையும் ஈழகேசரியானது தனது வெளியீடுகளில் தெரிவித்து வந்தது. அவற்றிலொரு செய்தியானது பின்வருமானது அமைந்திருந்தது.

*"நாட்டினது பொருளாதார நிலையினைச் சீர்படுத்த உதவுங்கள். கல்வி கற்ற உத்தியோகத்தரைத் தேடி நிற்கின்ற மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் பத்துப்பேர் கொண்ட கூட்டுறவுச் சங்கமொன்றினைத் தாபித்து பனை மரங்களைக் குத்தகைக்குப் பெற்று பதநீர் சேர்த்துப் பனங்கட்டித் தொழிற்சாலை மேற்கொள்ளலாம். ( ஈழகேசரி, 1993 மார்சு 12, ப.06)*

இவ்வாறு பனை வளத்தினைப் பாதுகாப்பதன் அவசியத் தொடர்பாகவும் பல்வேறு கட்டுரைகளைத் தனது வெளியீடுகளில் பிரசுரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கட்டுரைகளுடன் கவிதைகள், பாடல்கள், துணுக்குகள், நாடகங்கள் போன்றவற்றின் மூலமாகவும் பனை வளத்தினது முக்கியத்துவத்தினை யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஈழகேசரி உணர்த்தியது.

யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை, ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை போன்ற இடங்களிலிருந்து மட்டக்களப்பிற்குச் செல்லுகின்ற மரக்கலங்கள் மற்றும் வத்தைகள் என்பன ஏராளமான பனம் பொருட்களைக் கொண்டுசென்றன. இங்குள்ள பனம்பொருட்கள் மட்டக்களப்பு மக்களினால் விரும்பி நுகரப்பட்டன. இவ்வாறு அங்கு செல்லுகின்ற இவை அங்கிருந்து நெல், அரிசி என்பனவற்றினை ஏற்றி வந்தன. ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் தம்பலமாகத்தில் உற்பத்தியான நெல்லிற்கு யாழ்ப்பாணத்தில் நல்ல வரவேற்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஈழகேசரி, 1941 யூலை 21, ப.14)

இத்தகைய பனைவளமானது தேவையின்றி அழிக்கப்பட்டு வருவதனை ஈழகேசரியானது அவ்வப்போது கண்டிக்கவும் தவறவில்லை. குறிப்பாக கல்லோயாக்குடியேற்றத்திட்டத்தின் பொருட்டு அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவு பனைகள் தறித்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1951 இல் இதன் பொருட்டு ஏறத்தாழ 25000 பனைகள் தேவைப்பட்டிருந்தன. இதனால் தென்னிலங்கையினைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பனை மரங்களை கொள்வனவு செய்ய முற்பட்ட சமயங்களில் இவற்றினை அவர்களுக்கு விற்க முன்வந்த யாழ்ப்பாண மக்களை ஈழகேசரி எச்சரித்தது. அது அராபியர்களுக்குப் பேரீச்சம்பழம் எப்படிப் பிரயோசனமாகக் காணப்படுகின்றதோ அவ்வாறே வறண்ட பிரதேசமாகிய யாழ்ப்பாணத்து மக்களுக்கு பனை மரங்கள் இன்றியமையாதவை எனக் கூறிக் கண்டனம் செய்கின்றது. (ஈழகேசரி, 1951 மார்சு 11, ப.01) மேலும் ஒல்லாந்தரது காலத்திலும் பின்வந்த ஆங்கிலேயரது காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பனைகள் தறிக்கப்பட்டுப் பருத்தித்துறைத் துறைமுகத்தின் ஊடாகத் தென்னிந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அவை அங்குள்ள ஆட்சியாளர்களினால்

பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே பனை மரக்குற்றிகளை ஏற்றுமதி செய்கின்ற வியாபாரமும் யாழ்ப்பாணத்தவர்களினால் ஆங்கிலேயரது காலம்வரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக உணவிற்குத் தட்டுப்பாடென்பது யாழ்ப்பாணத்தில் இரண்டாவது உலக யுத்த காலங்களில் ஏற்பட்டது. அச்சமயத்தில் மக்கள் உள்நாட்டில் பனம் பொருட்களையே அதிகளவில் பயன்படுத்தினர். அச்சமயத்திலும் சரி 1956களில் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட சண்டைகளின்போதும் சரி யாழ்ப்பாணத்திலிருந்த வர்த்தகர்கள் உருவாக்கிய செயற்கையான தட்டுப்பாட்டினை ஈழகேசரி கண்டிக்கின்றது. இவ் விடயமாக அது கூறுகின்றபோது, மத்திய கிழக்கிலே உருவான சண்டையானது வடபகுதிவரை பரவிவிட்டதோ என்ற பயமானது யாழ்ப்பாணத்து மக்களுக்கு ஏற்பட்டதென்றால் அது யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களையே சாருமென கூசாமற் சொல்லிவிடலாம் என்கிறது. (ஈழகேசரி, 1966 நவம்பர் 11, ப.01 ) தொடர்ந்து கூறும்போது தீடீர் பணக்காரர்களாக வர விரும்புகின்ற இவர்களது நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கன என்ற கருத்தினையும் முன்வைக்கின்றது.

**கைத்தொழில்கள்**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் குடிசைக் கைத்தொழில்கள்யாழ்ப்பாணத்தினது பல பகுதிகளிலும் நடைபெற்று வந்ததுடன், பாரிய கைத்தொழில்கள் தொடங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்றமைக்கான தகவல்களையும் ஈழகேசரி தருகின்றது. ஒரு தேசமானது முன்னேறப் பாதையில் செல்ல வேண்டுமானால் அந்நாட்டில் கைத்தொழிற்துறையானது வளர்ச்சியடைந்திருத்தல் அவசியமென்பது தெரிந்ததே. அக்காலப் பகுதியில் பாரிய கைத்தொழிற்சாலைகள் பல தென்னிலங்கையில் இயங்கி வந்தபோதும் கூட அரசிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட அவை பெருமளவிற்கு நட்டத்தினையே சமகாலத்தில் கொடுத்துவந்தன. இவ்வாறு அரசிற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் நட்டத்தினையே கொடுத்து வந்தமையினால் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து மக்களும் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்திய இப்பத்திரிகை இந்தியாவிலுள்ள மைசூரில் அரசாங்கத்தின் ஆதரவுடன் பல தொழிற்சாலைகள் சில வருடங்களாக இயங்கி வருவதாகவும் அதற்கு உதாரணம் காட்டுகின்றது. அவ்வகையில் சீமெந்து தொழிற்சாலையானது ஈழகேசரி காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் முளைவிட ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1930 இல் இத்தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்கான இடங்கள் பல தெரிவு செய்யப்பட்டபோதும் இறுதியாகக் காங்கேசன்துறையே பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டு அதற்காக அரசாங்கத்தினால் 2500 ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இதன் பொருட்டு இங்கிலாந்திலிருந்து உபகரணங்களும் எடுத்துவரப்பட்டிருந்தன. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட சீமெந்தினை கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள நிலையமொன்று கொள்வனவு செய்தமை பற்றிய குறிப்புக்களை இப்பத் திரிகை தருகின்றது. அதாவது 8000 தொன் சீமெந்தினைஇலங்கையிடமிருந்து அந்நாடு கேட்டதாக அக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஈழகேசரி, 1951 மார்சு 11, ப.01)

யாழ்ப்பாணத்தினது கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் அவ்வப்போது தனது வெளியீடுகளில் ஈழகேசரி தெரிவித்து வந்தது. தென்னந் தும்பு உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, கண்ணாடி உற்பத்தி போன்ற தொழில்களை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றது. வடமாகாணத்தில் 1842இல் 18714நெசவுத்தறிகள் காணப்பட்டதாகவும் 1925 இல் அது 423 தறிகளாக வீழ்ச்சி கண்டதாகவும் புள்ளிவிபரத்துடன் கூறுகின்றது. (ஈழகேசரி, 1931 யூலை 29,

ப. 01) இப்பத்திரிகையில் யாழ்ப்பாணப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் அவ்வப்போது கூறப்பட்டாலும் கே.கந்தையா என்பவர் மேற்குறித்த விடயமாக ஈழகேசரியின் ஊடாகத் தனது கருத்தினைக் கூறும்போது, இங்கு நீர்ப்பாசன வசதிகள் குறைவு என்றும் கிழக்கு மாகாணம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதெனவும் வட பகுதியில் உள்ள துறைமுகங்கள் பல திறக்கப்படாமையினையும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களாகக் கூறுகின்றார். (ஈழகேசரி 1974 ஏப்ரல் 16, ப. 05)

ஈழகேசரி வெளிவந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பல சிறிய படகுகள் கிழக்கு மாகாணத்திற்கும் வன்னிக்கும் சென்றுவந்தன. இவை அப்பகுதிகளுக்குப் பனம் பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்துவிட்டுப் பதிலுக்கு அங்கிருந்து நெல்லினைக் கொண்டு வந்தன. யாழ்ப்பாணத்தினது ஒடியல், பனாட்டு என்பனவற்றுக்கு கிழக்குப் பகுதிகளில் வரவேற்புக்கிடைத்ததுடன், தம்பலகாமத்தில் விளைந்த நெல்லுக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல மதிப்பு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் சுருட்டுக் கைத்தொழில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. அக்காலப் பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் பிற தேசத்தவர்களுக்கும் யாழ்ப்பாணம் என்றாலே பனையும், சுருட்டும் அதற்கு மூலமான புகையிலையுமே பலரதும் மனதில் தோன்றும், யாழ்ப்பாண மக்களது நீண்டகால குடிசைக் கைத்தொழில்களில் சுருட்டுக் கைத்தொழிலும் ஒன்று. வயது வேறுபாடுகளின்றி பல ஆண்களும் ஈடுபட்ட இக்கைத்தொழிலானது இப்பகுதி மக்களது பிரதான வருமான மூலங்களிலொன்றாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. 8 வயதிலிருந்தே இதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். திறமையும் தேர்ச்சியும் நுட்பமும் பெற்ற தொழிலாளர்கள் பலர் இத்தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் அல்வாய், கொக்குவில், கோண்டாவில், வேலனை, அனலைதீவு, இணுவில் தாவடி, சுதுமலை, ஆனைக் கோட்டை, உரும்பிராய், குரும்பசிட்டி போன்ற இடங்களில் புகையிலை உற்பத்தியும் சுருட்டுக் கைத்தொழிலும் சிறப்பாக நடைபெற்று வந்தன. இப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையின் மொத்த சுருட்டுக் கைத்தொழிலாளர்களில் 70 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர். (ஈழகேசரி, 1993 மார்ச 10 ப. 14) மேலும் அக்காலப்பகுதியில் இங்கே ஏறத்தாழ 20 இற்கும் மேற்பட்ட சுருட்டு வகைகள் உற்பத்தியாகின என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் புகையிலையின் வருகையானது யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே திகழ்ந்தது. ஈழகேசரி வெளிவந்த காலத்தில் பல்வேறு வகையிலான புகையிலையினைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் கூட இறுதியாக வெள்ளைப் புகையிலையே யாழ்ப்பாணத்தவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தினது அக்காலப் பொருளாதாரக் கட்டமைப்பினை தெளிவாக எடுத்துக்காட்டும் இப்பத்திரிகையானது அச்சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சுருட்டுக் கைத்தொழில் தொடர்பான செய்திகள் பலவற்றினையும் தருகின்றது. அதாவது ஈழகேசரி பத்திரிகை வெளிவர ஆரம்பித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினது சுருட்டுக்கைத்தொழிலில் வீழ்ச்சிப் போக்கொன்று காணப்பட்டதனை அது தருகின்ற தகவல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அத்தகவல் வருமாறு.

"யாழ்ப்பாண நகர்வாசிகளான நமது சகோதரர் முற்காலந் தொட்டுப் பல ஆண்டுகளாய் முதன்மை பெறவும் முன்னோ

ராற் புகழப்படவும் முதற் காரணமாய் இருந்த சுருட்டுக் கைத்தொழிலின் தற்கால அதிசய வீழ்ச்சியானது எம்மவரின் சகிக்கரிய அபாயத்திற்குக் காலாயிருக்கின்றது. "(ஈழகேசரி, 1931 மார்ச்சு 18, ப.04)

அக்காலப்பகுதியில் எத்தனையோ குடும்பத்தவர்களது வாழ்வாதாரமாக விளங்கிய இக்கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகக் கருதப்படுவது அக்காலப்பகுதியில் பிற தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் 5 சதமாகவும் சுருட்டு 1 சதமாகவும் இருந்தாலும் அனேகர் சிகரெட்டினையே விரும்பி வாங்கினர். எனவே இத்தகையதொரு நிலையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் புகையிலைத் தொழிற்சாலையொன்று அமைக்கப்பட்டு அங்கே பலவிதமான சுருட்டுக்கள் உற்பத்தி செய்யப்பட்ட வேண்டுமெனவும் ஈழகேசரி கூறுகின்றது. (ஈழகேசரி, 1935 மே 20,ப.06)

1933 வரை இலங்கையில் சுருட்டுத் தொழிலுக்காக எவ்விதமான கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படவில்லை. என்றாலும் பின்னாளில் ஐக்கிய நாணய சங்கங்களது ஆதரவில் "யாழ்ப்பாண மலையாள புகையிலை வியாபாரச் சங்கம்" என்பது ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1936 இல் "வட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்" என்ற அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்களுக்கு இடையிலும் ஒற்றுமை காணப்படாமையினால் குறிப்பாக வட இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கங்கத்தின் தலைவர்களுக்கிடையில் காணப்பட ஒற்றுமையின்மையினால் அதில் பிளவுகள் ஏற்பட்டன. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் 4 சுருட்டுத்தொழிலாளர் சங்கங்கள் உருவெடுத்தன. அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், வட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், இலங்கை யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் என்பவைகளே அவை. இத்தகைய சங்கங்களின் பிளவு பற்றி ஈழகேசரியானது தனது கருத்தினைப் பின்வருமாறு முன் வைத்தது.

" சுருட்டுத் தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ள தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் போட்டி போட்டுக்கொண்டு கிளம்பிய நான்கு ஸ்தாபனங்களும் அவர்களின் பெலத்தினைக் குறைக்கின்றன. இதற்கு இவை அரசியல் கட்சிகளது மூலவேரிலிருந்து கிளம்பியமையே காரணம்". (ஈழகேசரி, 1955 யூலை 10, ப.07)

இறுதியாகச் சொல்லப்பட்ட அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தவிர்ந்த ஏனைய சங்கங்கள் மூன்றும் 1955 இற்குப் பின்னர் தாவடியில் நடைபெற்ற மாநாடொன்றில் இணைந்தன. இதன் தலைவராக எஸ். வைத்தியலிங்கம் என்பவர் தெரிவானார். தற்காலத்தில் இக்கைத்தொழிலின் முக்கியத்துவமானது அந்நிய பொருட்களின் வருகையின் பின்னணியில் மிகவும் குறைந்துவிட்டதெனலாம். அவ்வகையில் ஈழகேசரியினது காலத்திலும் சரி பின்வந்த காலங்களிலும் சரி யாழ்ப்பாண மக்களது பொருளாதாரத்தில் பல்வேறு வழிகளிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்த ஒரு கைத்தொழிலாக இதனைக் கருதலாம். இத்தகையதொரு பின்னணியிலேதான் பிற பத்திரிகைகள் தமது வெளியீடுகளில் கொடுக்காத முக்கியத்துவத்தினைச் சுருட்டுக் கைத்தொழிலுக்கு ஈழகேசரி கொடுத்தது மட்டுமன்றி அக்கைத்தொழில் வளர்ச்சியடைவதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் அவ்வப்போது தெரிவித்து வந்தது.

**மலையாளப் புகையிலை வியாபாரம்**

மலையாளப் புகையிலை வியாபாரமென்பது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு

வருவாயினைத் தரக் கூடியதான வெளிநாட்டு வருமான மூலமாகக்காணப்பட்டது. இத்தகைய வியாபாரமானது கேளரப் பகுதியுடனேயே அதிகளவில் நடைபெற்றதன் காரணமாகவே இப்பெயரினைப் பெற்றதெனலாம். இத்தகைய வியாபாரத்தினுடைய தன்மைகள், அதில் ஏற்பட்ட தடைகள், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றினை இப்பத்திரிகையானது தெளிவாகத் தருகின்றது.

இத்தகைய வியாபாரத்தின் ஊடாக அரசிற்குக் கிடைத்த வருவாய்கள் தொடர்பாக போர்த்துக்கேயரது ஆட்சியிலிருந்து குறிப்புக்கள் காணப்படுகின்றன. குத்தகைக்காரர்களுக்கு மட்டுமே புகையிலையினை விற்பனை செய்ய வேண்டுமென்று போர்த்துக்கேயரால் 1635 இல் கட்டளையொன்றும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 1945 இல் புகையிலை வர்த்தகத்தின் மூலமாக 5000 பர்தாக்கள் போர்த்துக்கேய அரசாங்கத்திற்கு வரியாகவும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (Abeyasinghe, Tikiri., 1986, p.37) அவ்வகையில் 1610 இல் போர்த்துக்கேயரால் இலங்கையில் விரிவுபடுத்தப்பட்ட இப்புகையிலைச் செய்கையானது யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தில் ஈழகேசரிக் காலத்தில் குறிப்பிட்டத்தக்க செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்ததெனலாம்.

17 ஆம் நூற்றாண்டில் புகையிலைச் செய்கை, வியாபாரம், சுருட்டுக் கைத்தொழில் போன்றன இலாபந் தருகின்ற தொழில்களாக காணப்பட்டன. (பத்மநாதன், 2001, ப.71) யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலையானது தென்னிலங்கையைக் மட்டுமன்றி சுமாத்திரா மற்றும் இந்தியாவிலுள்ள திருவாருங்கூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. (Bancil., 1971, p.292) இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் மூலமாகக் கிடைத்த வருவாயினைக் கொண்டுதான் அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறையாகக் காணப்பட்ட அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன எனலாம்.

இத்தகைய மலையாளப் புகையிலை வியாபாரமானது ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தின் இறுதியளவில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தமை பற்றி இப்பத்திரிகையின் ஊடாக அறிய முடிகின்றது. 1950இல் திருவாங்கூரிலிருந்த விவசாயிகள் நிதி நெருக்கடியினை எதிர்நோக்கியதனால் அச்சமயத்தில்யாழ்ப்பாணப்புகையிலையினை நல்ல விலைக்கு அங்கே விற்பனை செய்ய முடியவில்லை. மேலும் அப்பகுதிக்கு சமகாலத்தில்தமிழ்நாட்டிலுள்ளகோயம்புத்து, திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து புகையிலை அனுப்பப்பட்டதனால் யாழ்ப்பாணத்தவரது புகையிலைக்குப் பலத்த போட்டியும் இருந்தது.

இவ்விடயமானது சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த இந்துசாதனம் என்ற பத்திரிகையின் வெளியீடொன்றில் எஸ் அருளம்பலம் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

" திருவாங்கூரில் தேங்காய் நல்ல நிலையில் விற்கப்பட்ட காலத்தில் எம் புகையிலை அங்கு மனமாக விற்கப்பட்டது. ஆனால் இங்கே வியாபாரம் வீழ்ச்சியடைய மக்கள் பணப் பிரச்சினையினால் சிறந்த நல்ல புகையிலையினை வாங்கி உபயோகிக்க முடியாது போயிற்று. இது மாத்திரமன்றி எமது சொந்தப் புகையிலை வியாபாரிமார் மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் அனுபவிக்கும் முறையைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். (இந்துசாதனம், 1935 ஆகஸ்ட் 25,ப.06)

ஆரம்ப காலங்களில் திருவாங்கூரில் புகையிலையானது சாப்பிடுவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. இது நோய்களைக் குணப்படுத்த வல்லது என்ற நம்பிக்கையும் திருவாங்கூரில் காணப்பட்டது. இதன் காரணமாகவே யாழ்ப்பாணப் புகையிலையினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் திருவாங்கூர் அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்துடன் உடன்பாடொன்றினையும் செய்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலையினைச் சேகரிப்பதற்கு கொல்லம், ஆலப்பள்ளி ஆகிய இடங்களிலும் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. ஆரம்பகாலங்களில் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த புகையிலைவர்த்தகத்திற்கு தீர்வையும் இருக்கவில்லை. இருப்பினும் சட்ட விரோதமாகப் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டதனால் அவ்வரசாங்கம் இவ்வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு தனியாருக்கு 1864 இல் அனுமதியினை அளித்தது. இக்கட்டத்திலிருந்து தான் இவ்வியாபாரத்தில் தரகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தர கர்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியினைப் பெற்றே சேவையில் ஈடுபட்டனர். (ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப. 08)

1864இல் இருந்து 20 வருடங்களில் யாழ்ப்பாணத்தில் புகையிலை வியாபாரம் விருத்தியடைந்ததுடன் திருவாங்கூர் அரசாங்கத்திற்குத் தீர்வை வருமானமும் இதனால் அதிகரித்தது. 1885 இல் யாழ்ப் பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூர் புகையிலைக்கும் கண்டிக்கு விலை 90 ரூபாவா கவே இருந்தது. பின்னர் அது 110 ரூபாவாக உயர்த்தப்பட்டது. 1926 ஆம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலேய நிறையிலேயே தீர்வை முறைகள் ஏற்படுத்தப்பட்டன. 1931 தொடக்கம் திருவாங்கூருக்கு இறக்குமதி செய் யப்படுகின்ற யாழ்ப்பாணப் புகையிலைக்கு கண்டிக்கு தீர்வையானது 135 ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டது. அதேநேரத்தில் கோயம்புத்தூர் புகையிலை கண்டிக்கு 110 ரூபாவாகவே தொடர்ந்தும் வழக்கிலிருந்து வந்தது. (ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப.08)

1931 இல் மலையாளப் புகையிலை வியாபாரிகளில் சுமார் 300 பேர் வரையானவர்கள் சேர்ந்து கைத்தொழில் அமைச்சருக்கு அச்சமயத்தில் காணப்பட்ட மலையாளப்புகையிலை வியாபாரத்தினுடைய நிலை பற்றித் தெரிவித்து அதனைச் சீர்படுத்த உதவுமாறும் கூறி விண்ணப்பமொன்றினை அனுப்பியிருந்தனர். அதில் கோயம்புத்தூர் புகையிலைக்கும் யாழ்ப்பாணப் புகையிலைக் கும் ஒரேவிதமான தீர்வை விதிக்கப்பட்ட வேண்டுமெனவும் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலையினை இறக் குமதி செய்வதற்கு கொச்சின் துறைமுகத்தினை திறந்து விடுமாறும் கோரிக்கை விடப்பட் டிருந்தது (ஈழகேசரி, 1933 யூலை 02, ப.08)

யாழ்ப்பாண விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் தீர்வை வரிகள் ஒருபுறமிக்க தரகர்களின் கொடுமையானது மறுப்புறத்தில் காணப்பட்டது. இவற்றினைவிட புகையிலை பண்டகசாலைக்கு வருகின்ற சமயத்தில் காணப்பட்ட அளவு நிறையிலும்பார்க்க அவை வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றபோது அவற்றினது நிறையானது குறைவாகவும் காணப்பட்டது. இத்தகைய பிரச்சினைகளை யாழ்ப்பாண மலையாளப் புகையிலை வியாபாரிகள் எதிர்நோக்கியபோதும் இலங்கை அரசாங்கம் இவ்விடயமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் 1934 இல் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வானது இவ் வியாபாரத்தில் ஏற்பட்டதொரு முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகின்றது. அதுவரை காலமும் வியாபாரிகளது கைகளிலிருந்த இவ் வியா பாரத்தினை இச்சங்கம் ஏற்று நடாத்த முன்வந்தது. இதனால் வியாபாரிகள், தரகர்கள் போன்றவர்களால் ஏற்படுகின்ற தொல்லைகள் ஓரளவிற்குக் குறைவடைந்தன.

இச்சங்கத்தினது தோற்றந் தொடர்பாக மகிழ்ச்சியடைந்த ஈழகேசரி தனது கருத்தினைப் பலவாறு முன்வைக்கின்றது. அத்துடன் இச்சங்கத்தினுடைய நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற ஈழகேசரி இச்சங்கத்தின் மூலமாகப் புகையிலையினை அனுப்பிப் பயனடையுமாறு வியாபாரிகளைக் கேட்டது. இச்சங்கம் தருகின்ற விளம்பரங்களையும் அவ்வப்போது தனது வெளியீடுகளில் வெளியிட்டும் வந்தது.

"கமக்காரர்களுக்கு நிறைந்த நன்மையைச் செய்ய முற்பட்ட சங்கத்தை இப்போதே ஆதரித்து நிற்பது **யாவரதும்** கடனாகும்". (ஈழகேசரி, 1934 மே, ப. 08)

இருப்பினும் இச்சங்கத்தினது வருகையினால் பாதிக்கப்பட்ட பலரும் இதற்கு எதிராகக் குறைகள் கூறினர். அவ்வாறு குறை கூறுபவர்களையும் ஈழகேசரி கண்டிக்கத் தவறவில்லை. அதேநேரத்தில் திருவாங்கூர் அரசாங்கம் புகையிலையின் வரிகளை உயர்த்தியமையினை விமர்சிக்கவும் தயங்கவில்லை. எது எவ்வாறாயினும் மலையாளப் புகையிலை வியாபாரம் ஆரம்பித்த காலத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் அது ஒரு உறுதியற்ற வியாபார நடவடிக்கையாகவே காணப்பட்டது. குறிப்பாக அதது தனது உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் திருவாங்கூர் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளே இத்தகைய நிலைக்குக் காரணமெனலாம்.

யாழ்ப்பாணத்தில் சாய்ப்புச் சட்டம் அமுல் படுத்தப்படுதல் வேண்டுமெனக் கோரி கடைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பலர் கிளர்ச்சியொன்றில் ஈடுபட்டதாக இப்பத்திரிகையில் தகவலொன்று காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் அநேகர் இத்தகைய சட்டத்தினை வரவேற்கின்றார்கள் எனவும் அதற்கு யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தினர் எவ்விதமான பதிலையும் தரவில்லையெனவும் கூறி தொழில் மந்திரிக்கு மேற்குறித்த விடயமாகவும் மனுவொன்றினையும் அனுப்பியிருந்தனர். (ஈழகேசரி, 1941 யூன் 06, ப.01) மேலும் அக்காலப்பகுதியில் இத்தகைய சட்டம் வருவதனை அநேகமான முதலாளிகள் ஆதரித்தமையினையும் அறிய முடிகின்றது.

**சுதேசியம்**

யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற அக்கறை கொண்டிருந்த இப்பத்திரிகையானது சுதேசியத்திலும் தனது கவனத்தினைச் செலுத்தியது. அந்நியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதன் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கின்ற பணத்தினைத் தடுத்து நாட்டினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியிலும் அக்கறை காட்டியது. எடுத்துக்காட்டாக மண்ணெண்ணை அந்நியரது என்பதனால் அவ்விளக்கினைப் பாவிப்பதனை நிறுத்தி பதிலுக்குத் தேங்காய் எண்ணெயினை உள்ளூரிலிருந்து பெற்றுப் பயன்படுத்துமாறு கூறுகின்றது. ஆபத்து, அருவருப்பு இன்மை, செலவுச் சுருக்கம், நீண்ட நேரப்பயன்பாடு என்பனவற்றினை இதற்கான காரணங்களாகக் கூறுகின்ற இப்பத்திரிகையானது மனையாளை மறுத்து மற்றொரு மாதை மணப்பதாக இது ஒத்துள்ளதாகக் கூறுகின்றது. (ஈழகேசரி, 1930 செப்ரெம்பர் 24, ப.03)

மேலும் இப்பத்திரிகை இறக்குமதி செய்கின்ற ஆடம்பரப் பொருட்களாக சீனி, சிகரெட், மண்ணெண்னை என்பனவற்றினைக் கருதி அதனது இறக்குமதிகளுக்குத் தடை போடவும் அரசினைக் கேட்டிருந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினது நோக்கங்களிலொன்றாகவும் அந்நியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதென்பது

காணப்பட்டமையினால் உரும்பிராயில் உள்ள கடையொன்றுக்குச் சென்ற இளைஞர்கள் சிலர் 1931 ஆகஸ்ட் 1 இல் அங்கிருந்த சிகரெட், பீடி போன்றவற்றினைக் கொள்வனவு செய்து நாற்சந்தியில் எரித்த சம்பவத்தினையும் ஈழகேசரி தருகின்றது. (ஈழகேசரி, 1931 ஆகஸ்ட் 05, ப.03) அதுமட்டுமன்றி இவற்றினது கொள்விலையினைப் பெற்றுக்கொண்ட கடையினது உரிமையாளர்கள், இனியொரு போதும் அவற்றினை விற்பனை செய்வதில்லையெனவும் உறுதியெடுத்துக் கொண்டனர். ஆடம்பரப் பொருட்களது பகிஸ்கரிப்பினை மேற்கொள்ளுவதற்குப் பெண்களே சிறந்தவர்களென அவர்களை அடையாளப்படுத்துகின்ற இப்பத்திரிகை யானது அதற்கான காரணத்தினைப் பின் வருமாறு முன்வைக்கின்றது.

"இப்பிரதேசப் பொருட்களை எமது நாட்டிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டுமென்னும் விரதத்தைப் பெண்கள் கைக்கொண்டு அதற்காக உண்மையாக உழைப்பாளர்களாயின் எம் நாட்டிலிருந்து வருடா வருடம் வெளியே போகும் கோடிக்கணக்கான பொருள் இத்தீற்குள்ளயே தங்கும்." (ஈழகேசரி, 1931 யூலை 08, ப.01)

**கூட்டுறவு இயக்கம்**

யாழ்ப்பாண மக்கள் உன்னத நிலையினைப் பொருளாதாரத்தில் எட்ட வேண்டுமாயின் அதற்கு கூட்டுறவு இயக்கத்தின் விருத்தியானது உயிர் போன்றதென்ற கருத்தினை தனது ஆசிரியத் தலையங்கமொன்றில் ஈழகேசரி முன் வைக்கின்றது. நாடுகள் பலவற்றினது தொழில் விருத்திக்கும் செல்வப் பெருக்கிற்கும் இதன் பணியானது அளப்பரியதெனத் தொடர்ந்து இவ்விடயமாக மேலும் கூறுகின்றது. தொடர்ந்து கூறும்போது, கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான நோக்கங்களையும் கொள்கைகளையும் இன்னும் நம்மவர் உள்ளபடி அறிந்து கொள்ளவில்லை. வியாபாரத்துடன் தொடர்பான கூட்டுறவுப் பண்டகசாலைகள் தமது கடமையினை சரிவரச் செய்வதில்லை. அவற்றினை நடாத்துகின்ற அதிபர்கள், நிர்வாக சபையினர் இவ்விடயமாகப் போதியளவு அக்கறையினைக் காட்டுவதில்லை. இதனால் அதில் அளவு கடந்த தவறுகள், ஊழல்கள் என்பன காணப்படுகின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகள் உரிய முறையில் நன்கு நடாத்தப்படின் சுயநலப் புலிகளுக்கும் கொள்ளை இலாபக்காரர்களுக்கும் இடமேது. ஐரோப்பாவில் தொழில் நிலையங்கள் மிக்க விருத்தியும் பெருமையும் அடைவதற்கு அத்தேச மக்களது கடமையின் திறமையும் நேர்மையுமே முக்கியமான காரணம். எனவே அவர்களை நாமும் ஏன் பின்பற்றக் கூடாது? பின்பற்றி ஏன் நாட்டினை முன்னேற்ற முடியாது." (ஈழகேசரி 1953 நவம்பர் 01, ப. 04)

**நிறைவுரை**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசமானது முழுக்க முழுக்க விவசாயப்பிரதேசமாகவே காணப்பட்டது இதனால் அக்காலப்பகுதியில் விவசாயத்தில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள், எடுக்கப்பட்ட தீர்வுகள், அக்காலக் கைத்தொழில் நிலை, அது வளர்க்கப்பட்ட வேண்டியதன் அவசியம், சுதேசியம் பற்றிய தகவல்களையெல்லாம் இப்பத்திரிகையின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. அதுமட்டுமன்றி அச்சமயத்தில் உறுதியற்ற தன்மையில் சென்று கொண்டிருந்த யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளையும் இப்பத்திரிகை தனது வெளியீடுகளின் மூலமாகத் தெரிவித்தது. பொதுவாக அக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பத்திரிகைகளில் அனேகமானவை மதப்பிரசாரத்தினை முதன்மைப் படுத்தியவைளாகவே காணப்பட ஈழகேசரி அவற்றிலிருந்து விலகி நின்று தேசத்தின்

வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களையும் முற்போக்கான சிந்தனைகளையும் தனது வெளியீடுகளில் வெளியிட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. அக்கால ஏறத்தாழ முப்பது வருடகால யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையினைஅறிந்தகொள்ள விரும்புகின்ற எவரும் இப்பத்திரிகையினை ஒதுக்கிவிட்டுச் செல்ல முடியாததென்பதே உண்மை. இது தருகின்ற தகவல்கள் எல்லாமே மூலமான தகவல்கள். அவ்வகையில் தனதுகால (1930- 1958) யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையினைப் படம் பிடித்துக் காட்டுகின்ற வகையில் இதனது பணியானது அளப்பரியதெனலாம்.

**உசாத்துணைப் பட்டியல்**
**தமிழ்**

1. ஆனந்தராஜ்.ந., (2002). " சுதந்திரத்திற்குப் பின் ஈழத்தில் தமிழ் பத்திரிகைத்துறையின் வளர்ச்சி ஒரு நோக்கு", தமிழ் இலக்கியப் பெருவிழா, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, கொழும்பு.
2. சுப்பிரமணியம் .நா., (1978) ,ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முத்தமிழ் வெளியீடு, முள்ளியவளை.
3. பத்மநாதன், சி., ( 2001) இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு. 2001.

## English

1. Bancil, P., (1971), Ceylon Agriculuture, Dhanaptrai and son, Delhi.
2. Seneveratne, S., (1996) Field Crop of Ceylon, Lake House Investment Ltd. Colombo.

**பத்திரிகைகள்**

1. அருளம்பலம், எஸ்., "சுருட்டு வியாபாரம்" , இந்துசாதனம் சைவபரிபாலன சபை, வண்ணார்பண்ணை, 1935, ஆகஸ்ட் 22.
2. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1930 செப்ரெம்பர் 24.
3. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்ச்சு 18.
4. நமசிவாயம், கவை., "நமது தேசம் நன்னிலை அடைவதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன" ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்ச 18.
5. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்சு 18.
6. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 யூலை 08.
7. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 யூலை 21.
8. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 ஆகஸ்ட் 05.
9. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 ஜனவரி 01.

*10. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 மார்சு 10.*
*11. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 மார்சு 12.*
*12. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 யூலை 02.*
*13. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1934 மே 13.*
*14. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1935 மே 20.*
*15. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 ஜனவரி 26.*
*16. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 யூன் 06.*
*17. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 யூலை 21.*
*18. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1942 ஒக்ரோபர் 04.*
*19. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1942 யூன் 16.*
*20. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1946 நவம்பர் 11.*
*21. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1947 ஏப்பிரல் 06.*
*22. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1947 யூலை 06.*
*23. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1951மார்சு 11.*
*24. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1951மார்சு 11.*
*25. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1952 டிசெம்பர் 02.*
*26. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1953 நவம்பர் 01.*
*27. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1955 யூலை 03.*
*28. உதயன், உதயன் பப்ளிகேசன்ஸ், யாழ்ப்பாணம், 2002 மார்ச்சு 18.*